செ.வெ.எண்: 139 நாள்:15.02.2020

**காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டத்தால் பல தலைமுறைகள் பயன்பெற உள்ளது.**

**பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேச்சு.**

---

புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (15.02.2020) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம் அவர்கள் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகளின் முன்னேற்றத்திற்காக பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி தரத்தை மேம்படுத்தும் வகையில் விலையில்லா மிதிவண்டி, மடிக்கணினி, பேருந்து பயண அட்டை போன்ற 14 வகையான கற்றல் உபகரணங்கள் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 106 மாணவர்களுக்கும் மற்றும் கீரனூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 348 மாணவிகளுக்கும் என மொத்தம் 454 மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை மாணவர்கள் தங்களது கல்வி முன்னேற்றத்திற்கு நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் 100 ஆண்டுகால கனவு திட்டம் மற்றும் 40 ஆண்டுகால கோரிக்கை காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டமாகும்.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மிகுந்த பயனளிக்கும் இத்திட்டத்தை நிறைவேற்ற அனைத்து தரப்பினரிடமும் இருந்து வரபெற்ற கோரிக்கையினை ஏற்று காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கு நேற்றையதினம் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் முதற்கட்ட பணிகளுக்காக ரூ.700 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு வரலாற்று சாதனையாகும்.

இத்திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயம் செழித்து, பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதுடன், மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதுடன், புதுக்கோட்டை மாவட்டத்தில் பல தலைமுறைகள் பயன்பெற வழிவகை ஏற்படும்.

தொடர்ந்து தமிழக அரசு பள்ளி மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக செயல்படுத்தி வரும் இதுபோன்ற நலத்திட்டங்களை மாணவர்கள் உரிய முறையில் பயன்படுத்தி கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.ஜெயலட்சுமி, மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட கல்வி அலுவலர் இராஜேந்திரன், வருவாய் கோட்டாட்சியர் டெய்சிகுமார், ஆத்மா குழுத் தலைவர் பால்ராஜ், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**